மீன்களைப் பிடிக்க வேண்டுமெனில் குளத்தின் தண்ணீரைக் குறைத்துவிடும்

‘எஸ்.ஐ.ஆர்’ மோசடி! படிவம் 7இல் என்ன நடந்தது?

ஒரு நாட்டில் ராணுவ ஆட்சி அல்லது சர்வாதிகார ஆட்சி நடைபெறுகிறது என்றால், அதற்கு ஒரே பொருள் மக்களின் வாக்குரிமை தடுக்கப்படுகிறது என்பதுதான். சர்வாதிகார ஆட்சி அமலுக்கு வரும்போது தேர்தல்கள் நடைபெறாது. ஆனால் அப்போதுகூட மக்கள் தங்கள் வாக்குரிமையை இழக்க மாட்டார்கள். ஆனால் இந்தியாவில் இப்போது நடந்து கொண்டிருப்பது அதைவிட மோசமான சர்வாதிகாரம். இங்கு தேர்தல்கள் நடக்கும்; ஆனால் மக்களில் ஒரு பகுதியினர் வாக்குரிமையை இழப்பார்கள். ‘சிறப்பு தீவிர திருத்தம்’ (SIR) மூலம் நடந்தது இதுதான்.

நாம் இதுவரை மின்னணு வாக்குப்பதிவு இயந்திர மோசடிகள் மூலம் பா.ஜ.க.வுக்குச் சாதகமாக நடத்தப்பட்ட மோசடிகளைத்தான் பேசிக்கொண்டிருந்தோம். ஆனால் இந்திய மக்களாட்சித் தத்துவத்திற்குச் சாவுமணி அடிக்கும் வாக்காளர் ‘சிறப்பு தீவிர திருத்தத்தில்’ (SIR) படிவம் 6 மற்றும் 7இல் இரண்டு பூதங்கள் மறைந்திருந்தன.

இந்த பூதங்களை ஆரம்பத்திலேயே இனம் கண்டு சிறப்பு தீவிர திருத்தத்தைக் கடுமையாக எதிர்த்தவர் தி.மு.க. தலைவர். இந்த இரண்டு பூதங்களும் நடத்திய வெறியாட்டம் இப்போது முழுமையாக அம்பலமாகி வருகிறது.

மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, அரவிந்த் கெஜ்ரிவால் போன்ற இந்தியாவின் மாபெரும் தலைவர்கள் தேர்தலில் வெல்லப் பட்டதும், பா.ஜ.க.வை எதிர்த்த கட்சிகள் தேர்தல்களில் யாராலும் நம்பமுடியாத தோல்விகளை அடைந்ததுக்குமான விடை இப்போது கிடைத்துக்கொண்டிருக்கிறது. மாபெரும் வாக்குத் திருட்டின் மூலம் இந்தத் தலைவர்களும் கட்சிகளும் வீழ்த்தப்பட்டிருக்கின்ற ஜனநாயகப் படுகொலை அரங்கேறியிருக்கிறது.

நீட் தேர்வில் வினாத்தாள் கசிந்ததற்காக நாடு முழுக்க மறுதேர்தல் நடத்தப்படுகிறது. மக்களாட்சித் தத்துவத்திற்கு எதிராக, சிறப்பு தீவிர திருத்தத்திற்குப் பின் 13 கோடி வாக்காளர்களின் வாக்குகள் திருடப்பட்டிருக்கின்றன எனில், எஸ்.ஐ.ஆர்க்குப் பிந்தைய அனைத்துத் தேர்தல்களும் ரத்து செய்யப்பட்டு, வாக்குச்சீட்டு முறையில் மறுதேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

படிவம் 6 மற்றும் படிவம் 7 மோசடிகள்

சிறப்பு தீவிர திருத்த நடைமுறையில், படிவம் 6இல் 20 ஆண்டுகளுக்கு முந்தைய தகவல்களைக் கேட்டு ஏராளமானோர் வாக்குகளை இழக்கச் செய்தது, சரியான ஆவணங்களை அளித்தவர்களிடமும் மேல்முறையீட்டை ஏற்க மறுத்து அவர்கள் வாக்குரிமையைப் பறித்தது என வெளிப்பட்ட மோசடிகள் பெரும் விவாதப் பொருளாகின. இப்போது அதன் இரண்டாம் அத்தியாயம் படிவம் 7 குறித்த மோசடிகள் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

தண்ணீரை வற்ற வைத்து மீன் பிடிக்கும் தந்திரம்

உங்களால் ஒரு குளத்தில் உள்ள பெரிய மீன்களைப் பிடிக்க முடியவில்லை எனில், உங்களது எந்த வலைக்கும் அந்த மீன்கள் சிக்கவில்லை என்றால், அவற்றைப்பிடிக்க ஒரு வழிதான் இருக்கிறது. அது, அந்த குளத்தின் தண்ணீரைக் குறைத்துவிடுவது.

அந்தக் குளத்தின் நீர் ‘வாக்காளர்கள்’ என்றால், மீன்கள் ‘பா.ஜ.க.வை எதிர்க்கும் கட்சிகளும் தலைவர்களும்’. பா.ஜ.க.வும் தேர்தல் ஆணையமும் கூட்டுச் சேர்ந்து இந்த இழிவான வழிமுறை மூலம்தான் எதிர்க்கட்சிகளைத் தோற்கடித்துள்ளன.

இது எப்படித் தேர்தலில் பிரதிபலிக்கிறது?

தேர்தலில் எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு வாக்கு வங்கி இருக்கிறது என்பதை ஓரளவு துல்லியமாகக் கணிக்கும் முறைகள் வந்துவிட்டன. குறிப்பாக, ஒரு அரசியல் கட்சியின் செல்வாக்கு, கட்சித் தலைமையின் செல்வாக்கு, வாக்காளரின் செல்வாக்கு, ஆட்சியில் இருக்கும் கட்சி எனில் அதன் செயல்பாடுகள், வேட்பாளரின் பின்புலம் மற்றும் தனிப்பட்ட செல்வாக்கு, வாக்களிப்பதில் வட்டாரம் சார்ந்த சில தனித் தன்மைகள், ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பாரம்பரிய ஓட்டு வங்கி, சில சமூகப் பிரிவினர் சில கட்சிகளுக்குக் காட்டும் எதிர்ப்புணர்வு எனப் பல காரணங்கள் வழியே தேர்தல் முடிவுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

அதாவது ஒவ்வொரு பகுதியிலும் வாக்களிக்கும் தன்மை (Pattern) குறித்துத் தெளிவான தகவல்கள் இருக்கின்றன. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட தொகுதியில் இஸ்லாமியர்களின் வாக்குகள் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு ஆதரவாகப் போகும் என்றால், அந்த வாக்குகள் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கும் என்றால், அங்கே இஸ்லாமியர்களில் கணிசமானோரின் வாக்குரிமையைப் பறித்துவிட வேண்டும். அப்போது தேர்தல் முடிவுகள் தலைகீழாகிவிடும். இதுதான் குளத்திலிருக்கும் மீனைப் பிடிக்கத் தண்ணீரைக் குறைக்கும் முறை.

நெருக்கமான போட்டிகளில் வெற்றி-தோல்வியைத் தீர்மானித்தல்

பல சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகளில் வெற்றிதோல்வி என்பது சில ஆயிரம் (சில நேரங்களில் சில நூறு) வாக்குகள் வித்தியாசத்திலேயே தீர்மானிக்கப்படுகிறது. ஒரு தொகுதியில் 5,000 முதல் 10,000 வரை எதிர்க்கட்சியின் உறுதியான வாக்குகள் நீக்கப்பட்டால், அது போட்டியின் முடிவையே தலைகீழாக மாற்றிவிடும். தகுதியான வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்குச் செல்லும்போதுதான் தங்கள் பெயர் பட்டியலில் இல்லை என்பதை அறிந்துகொள்கிறார்கள். கடைசி நேரத்தில் அவர்களால் பெயர் சேர்க்க முடியாது என்பதால், அவ்வாக்குகள் முற்றிலும் வீணாகின்றன.

படிவம் 7 மோசடி எப்படி நடந்தது?

இந்திய தேர்தல் விதிகளின்படி (Registration of Electors Rules, 1960), வாக்காளர் பட்டியலில் உள்ள ஒருவரது பெயரை நீக்குவதற்கு அல்லது ஒருவரது பெயர் சேர்ப்பதற்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்குப் படிவம் 7 பயன்படுத்தப்படுகிறது. மரணம், ஒரே நபர் இரண்டு இடங்களில் வாக்காளராக இருப்பது (Duplication), நிரந்தரமாக வேறு இடத்திற்குக் குடிபெயர்தல், போலி முகவரி அல்லது தகுதியின்மை ஆகிய காரணங்களுக்காக மட்டுமே பெயரை நீக்கக் கோர முடியும்.

முன்பெல்லாம் ஒரு குறிப்பிட்ட வாக்குச் சாவடியைச் (Polling Booth) சேர்ந்த வாக்காளர் மட்டுமே, அதே சாவடியில் உள்ள மற்றொருவரின் பெயர் மீது ஆட்சேபனை தெரிவிக்க முடியும். ஆனால், 2022ஆம் ஆண்டு தேர்தல் ஆணையம் கொண்டு வந்த திருத்தத்தின்படி, ஒரு தொகுதிக்கு உட்பட்ட எந்தவொரு வாக்காளரும் அந்தத் தொகுதியின் எந்தவொரு நபரின் பெயரை நீக்கவும் படிவம் 7 சமர்ப்பிக்கலாம் என விதிகள் தளர்த்தப்பட்டன. இந்தத் திருத்தமே தற்போது தவறாகப் பயன்படுத்த வழிவகுத்துள்ளது.

தேர்தல் நடைமுறையில் அரசியல் கட்சிகளால் நியமிக்கப்படும் வாக்குச்சாவடி முகவர்கள் (Booth Level Agents BLAs), பா.ஜ.க வுக்குச் சாதகமாகவும் சட்டவிரோதமாகவும் எவ்வாறு செயல்பட்டார்கள் என்பது அம்பலமாகியுள்ளது:

1. களஆய்வு செய்யாமல் போலித் தகவல்களை அளித்தல்:

ஒரு BLA என்பவர் தனது வாக்குச்சாவடிக்கு உட்பட்ட பகுதிகளை நன்கு அறிந்தவர். ஆனால், பல இடங்களில் வாழும் நபர்களை அல்லது தங்கள் கட்சிக்கு வாக்களிக்காத சமூகத்தினரை “முகவரி மாறிச் சென்றுவிட்டனர்” (Shifted) அல்லது “இறந்துவிட்டனர்” (Deceased) எனக் கூறி, எவ்வித கள ஆய்வும் இன்றி தவறான தகவல்களுடன் கூடிய படிவம் 7ஐத் தயாரித்துக் கொடுத்துள்ளனர்.

2. முன்பே நிரப்பப்பட்ட படிவங்களை மொத்தமாகத் தாக்கல் செய்தல் (Bulk Filing):

சட்டப்படி ஒரு வாக்காளரின் பெயரை நீக்க வேண்டுமெனில், BLAக்கள் குறிப்பிட்ட நபருக்கான காரணத்தைத் தனித்தனியாகக் குறிப்பிட வேண்டும். ஆனால், பா.ஜ.க. முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆயிரக்கணக்கான முன்பே அச்சிடப்பட்டு/நிரப்பப்பட்ட (Pre filled / Preprinted) படிவம் 7 விண்ணப்பங்களை ஒரே நேரத்தில் அரசு அதிகாரிகளிடம் (BLO) கொடுத்து அழுத்தம் கொடுத்துள்ளனர்.



மனுஷ்ய புத்திரன்
மாநில ஆலோசகர், தி.மு.க.
தகவல் தொழில்நுட்ப அணி

3. ஆள்மாறாட்டம் மற்றும் போலிக் கையெழுத்து (Forgery):

- நீக்கக் கோரும் படிவம் 7இல் ஆட்சேபனை தெரிவிக்கும் நபரின் (Objector) கையெழுத்து அவசியமானது.
- பா.ஜ.க முகவர்கள், சம்பந்தப்பட்ட வாக்காளர்களின் அல்லது அப்பகுதி மக்களின் அனுமதியின்றி போலிக் கையெழுத்துகளைப் போட்டு படிவங்களைச் சமர்ப்பித்துள்ளதாகப் புகார்கள் எழுந்துள்ளன.
- சில இடங்களில் எதிர்ப்பு தெரிவிப்பவரின் பெயர் பத்தியைக் காலியாக விட்டு விட்டு அல்லது போலியான பெயர்களைப் பயன்படுத்தி விண்ணப்பித்துள்ளனர்.

4. அரசு அதிகாரிகளுக்கு (BLO) நெருக்கடி அளித்தல்:

தேர்தல் பணிகளில் ஈடுபடும் வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளிடம் (BLOs) தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி, “இந்த படிவங்களை உடனடியாக ஏற்றுக்கொண்டு பெயர்களை நீக்க வேண்டும்” என்று சட்டவிரோத அழுத்தம் கொடுத்துள்ளனர். மேலும், சில இடங்களில் தேர்தல் அதிகாரிகளின் பெயரைப் போலியாகப் பயன்படுத்தி BLOக்களை ஒப்புக்கொள்ள வைத்த சம்பவங்களும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

மாநில வாரியாக எழுந்த புகார்கள்

- **கர்நாடகா:** கர்நாடக மாநிலம் பல்லாரி (Ballari) நகர சட்டமன்றத் தொகுதியில், 7,561 வாக்காளர்களின் பெயர்களை நீக்கக்கோரி படிவம் 7 தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறி, பா.ஜ.க பிரதிநிதி (BLA1) மற்றும் பல்லாரி மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவருமான டி. ஸ்ரீனிவாஸ் மோத்கூர் மீது காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்துள்ளனர்.
- **தெலுங்கானா & மகாராஷ்டிரா:** தெலுங்கானாவில் சிறுபான்மையின மக்களின் பெயர்களை நீக்கப் படிவம் 7 தவறாகப் பயன்படுத்தப்படுவதாக அமைச்சர்கள் மற்றும் AIMIM தலைவர் அசாதுதீன் ஒவைசி போன்றோர் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளித்துள்ளனர்.
- **தேசிய அளவில் எதிர்க்கட்சிகள் புகார்:** மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் SIR பணி நடக்கும் போது, பா.ஜ.கவினர் மொத்தமாகப் போலி படிவம் 7ஐத் தாக்கல் செய்து தகுதியான வாக்காளர்களை நீக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டுள்ளன.
- **டெல்லி & பிற மாநிலங்கள்:** டெல்லியிலும், பா.ஜ.கவுக்கு எதிரான வாக்குகள் அதிகம் உள்ள தொகுதிகளில் லட்சக்கணக்கான பெயர்கள் இதேபோன்று நீக்கப்பட்டதாக ஆம் ஆத்மி மற்றும் எதிர்க்கட்சிகள் முன்னர் குற்றஞ்சாட்டியுள்ளன.

தேர்தல் ஆணையத்தின் மீதான முதன்மை குற்றச்சாட்டுகள்

- படிவம் 7 போலித் துஷ்பிரயோகத்தைக் கண்டுகொள்ளாமை (Collusion in Mass Voter Deletion):

வாக்காளர் நீக்கத்திற்கான படிவம் 7ஐப் பயன்படுத்தி ஆளுங்கட்சியினர் (பா.ஜ.க BLAக்கள்) போலிக் கையெழுத்திட்டு, முன்னரே நிரப்பப்பட்ட (prefilled) படிவங்களை லட்சக்கணக்கில் மொத்தமாகச் சமர்ப்பித்ததை (Bulk Submissions) தேர்தல் ஆணையம் தடுத்து நிறுத்தவில்லை. எதிர்க்கட்சி வாக்குகள் மற்றும் சிறுபான்மையின வாக்குகளை நீக்கத் தன்போக்கில் அனுமதித்ததாகத் தலைமை ஆணையர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

- **டிஜிட்டல் மென்பொருள் அமைப்பின் முறைகேடு (Software & ECINET Flaws):**

தேர்தல் ஆணையத்தின் மென்பொருள் அமைப்பில் (ECINET / Software System) அதிகாரிகள் மனிதரீதியாகத் தலையிட்டுத் திருத்த முடியாத வகையில் ‘Glitch’ உருவாகியிருப்பதாகவும், இதன் மூலம் தகுதியான பல வாக்காளர்களின் பெயர்கள் தன்னிச்சையாகப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, பின் முறையீடுகளும் நிராகரிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

- **போலி படிவம் 7 குறித்த எஃப்.ஐ.ஆர் (FIR Action):**

கர்நாடகா மற்றும் உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களில், BLAக்கள் மற்றும் போலி நபர்கள் மூலம் படிவம் 7 தவறாகத் தாக்கல் செய்யப்பட்டது தொடர்பாக, பாரதிய நியாய சன்ஹிதா (BNS) விதிகளின் கீழ் (ஏமாற்றுதல், ஆள்மாறாட்டம், போலி ஆவணம் தயாரித்தல்) காவல் நிலையங்களில் பல முக்கிய FIRகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உச்சநீதிமன்ற நீதிபதிகளின் கண்டனக் குரல்கள்

நீதிபதி உஜ்ஜல் புயான்:

நாடு முழுவதும் வாக்காளர் பட்டியல்களில் இருந்து அதிக அளவிலான பெயர்கள் நீக்கப்படுவதற்குக் காரணமான ‘சிறப்பு தீவிர திருத்தத்தை’ (SIR) கடுமையாக விமர்சித்த உச்சநீதிமன்ற நீதிபதி உஜ்ஜல் புயான் “கோடிக்கணக்கான இந்திய குடிமக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் எந்தவொரு நடைமுறையும் இயல்பாகவே தாந்தோன்றித்தனமானது. எந்தவொரு சாக்குப்போக்கும் இதை நியாயப்படுத்த முடியாது. இது அரசியலமைப்பின் ஆன்மாவையே தாக்குகிறது. நாம் அரசியலமைப்பின் கீழ் ஏற்றுக் கொண்ட அரசியலமைப்பு அமைப்பையே இது நிராகரிப்பதாகும் என்ற அளவிற்கு நான் கூறுவேன். இது பல போராட்டங்கள் மற்றும் தியாகங்களுக்குப் பிறகு பெற்ற நமது சுதந்திரத்தின் வெளிப்பாடாகும். சட்டப்பிரிவு 326ஐ (அனைவருக்கும் வாக்குரிமை) சிறிதும் சிதைக்க முடியாது. எந்தவொரு அதிகார அமைப்பும் அதைச் செய்ய முடியாது, எந்தவொரு நீதிமன்றமும் அதை மன்னிக்க முடியாது. அரசியலமைப்புக்கு மேல் யாரும் இல்லை” என்றார்.

முன்னாள் நீதிபதி ரோஹிண்டன் பாலி நரிமன்:

உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரோஹிண்டன் பாலி நரிமன் அவர்கள் “வாக்காளர் பட்டியலிலிருந்து மக்கள் ‘சட்டவிரோதமாக நீக்கப்படுவதால்’ ஜனநாயகத்தின் இதயப் பகுதியாக இருக்கும் ஒரு குடிமகனின் வாக்களிக்கும் உரிமை பெரும் ஆபத்தில் உள்ளது. வங்காளத் தேர்தலில் 90 லட்சம் வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதை நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள். இது ஒரு அதிர்ச்சியூட்டும் எண்ணிக்கையாகும். தொண்ணூறு லட்சம் வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது உச்ச நீதிமன்றத்தைப் போதுமான அளவு அசைக்கவில்லை; இதற்கு இடைக்காலத் தடை விதிக்கவும் இல்லை.

வாக்குரிமை பறிக்கப்பட்டவர்களில் சுமார் 22 லட்சம் பேர் மேல்முறையீடு செய்துள்ளனர். மற்றவர்கள் நீதி பெறுவதற்கான வசதியோ அல்லது அணுகலோ இல்லாத மக்களாகத்தான் இருக்க வேண்டும். மேல்முறையீடு செய்யப்பட்ட 1 லட்சம் வழக்குகளில், கிட்டத்தட்ட அனைத்தும் வாக்காளர்களுக்கு ஆதரவாகவே தீர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலமாகவே தேர்தல் ஆணையத்தின் செயல் முற்றிலும் சட்டவிரோதமானது என்பதை நீங்கள் யூகிக்க முடியும். ஒரு அரசு அது விரும்புவதைப் பெறுவதற்காகச் சாதாரண மனிதனை, இந்தியக் குடிமகனை வெளியில் தள்ளுவதாகும்.”

பாசிச சக்திகளுக்கு முடிவு கட்டும் போராட்டம்

பா.ஜ.கவிற்கு ஊழியம் செய்வதற்காகப் படுபாதகங்களைத் தயக்கமின்றி செய்திருக்கும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரைப் பதவி விலகச் சொல்லி, இன்று ஜனநாயக சக்திகள் நாடு முழுவதும் பெரும் போராட்டங்களைத் தொடங்கியுள்ளன.

இது ஞானேஷ்குமாருக்கு எதிரான போராட்டமாக மட்டுமல்லாமல், மக்களாட்சித் தத்துவத்தை மரணக்குழிக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் பாசிச சக்திகளுக்கு முடிவு கட்டும் போராட்டமாகவும் மாறவேண்டும்.

த.வெ.க.வுக்கு வாக்களித்த மக்களுக்கு ஏமாற்றம்தான்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்குதான் வெற்றி கிடைக்கும்!

வாக்களித்தபின் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா பேட்டி!

தாராபுரம், அக். 7–

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு தான் வெற்றி நிச்சயம் என்று தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ். சுகன்யா செய்தியாளர்களிடம் கூறினார்!

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா நேற்று (06.10.2026) காலை 7.00 மணியளவில் தளவாய் பட்டினம் புரட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் தனது ஜனநாயக கடமையை ஆற்றினார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது :–

தி.மு.க.வின் வெற்றி உறுதி குறித்த ஆதரவாளரின் கருத்துகள்?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர், வழக்கறிஞர் எஸ். சுகன்யா எனும் நான் என்னுடைய சொந்த ஊரான தளவாய்பட்டினத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் முதல் நபராக நான் எனது ஜனநாயக கடமையை வெற்றிகரமாக தொடங்கி வச்சிருக்கேன். எங்கள் கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வெற்றி நிச்சயம்.

இங்கே பாதுகாப்பு எல்லாம் எப்படி இருக்கு?

நல்லா இருக்கு, நான் இங்கு உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் உள்ளே சென்று ஆய்வு செய்தேன், பொதுமக்கள் அனைவரும் பொறுமையுடனும், எழுச்சியுடனும் அமைதியான முறையில் வாக்களித்து வருகின்றனர்.

ஜந்து முனைப் போட்டி பெரிய சவாலா இருக்கும்னு நினைக்கி றீங்களா?

அப்படி எல்லாம் இல்லை, வெற்றி கண்டிப்பா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு தான்.

வெற்றிக்கு அடிப்படை காரணமா எது இருக்கும்னு நினைக்கி றீங்க?

தமிழகத்தில் கடந்த மூன்று மாத காலமாக நடந்த ஏமாற்றம் தான் மக்களோட மாற்றமா இருக்கும். ஆட்சி மாற்றம் தேவை என்று வாக்களித்த அனைத்து மக்களும் இன்று ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதுவே திராவிட முன்னேற்றக் கழற்றி வெற்றிக்கு காரணமாக இருக்கும்.

தி.மு.க. தலைவர்களோட பிரச்சாரம் உங்களுக்கு எந்த அளவுக்கு வலு சேர்த்திருக்கும்னு நினைக்கி றீங்க?



கழகத் தலைவர், எந்நாளும் எங்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற குழுத்தலைவர் கவிஞர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி மற்றும் கூட்டணிக் கட்சித் தலைவர்களின் பிரச்சாரங்கள் பொதுமக்களிடையே நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. கழகத் தலைவர் அவர்களின் “ரோடு ஷோ” பொதுமக்களிடம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமான உதய சூரியன் சின்னத்திற்கு பெரிதும் வலு சேர்த்திருக்கிறது.

தி.மு.கழகத்தினை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதற்காக இடைத்தேர்தல் பொறுப்பாளர்களாக தலைமைக் கழகத்தால் நியமனம் செய்யப்பட்ட கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன் ஏற்பாட்டில் கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா உள்பட மாவட்டக் கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, மாநகர, நகர, பகுதி, வட்டக் கழக, வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும்

இரவு, பகல் பாராமல் எவ்வளவு தூரம் ஹார்ட் வொர்க் பண்ண முடியுமோ அவ்வளவு தூரம் பண்ணிருக்காங்க. அனைத்து நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

சாதகமா என்னென்ன அம்சங்கள் இருக்கும்?

எல்லா அம்சங்களுமே எங்களுக்கு சாதனமாக தான் இருக்கு, அவங்க எதுவுமே பண்ணலையே. கடந்த 3 மாத காலமாக தமிழகத்தில் கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள், லாக்கப் மரணங்கள் தான் அதிக அளவில் நடந்து உள்ளது. விலைவாசி உயர்வு, கரண்ட் கட்டண உயர்வு தான் சாதனையாக உள்ளது. கடந்த 2021ல் நடைபெற்ற எங்களோட திராவிடம் மாடல் ஆட்சியின் 100 நாள் சாதனை திட்டங்களையும் பாருங்க. இப்ப அவங்க உங்க ஆட்சியில் நடைபெற்றுள்ள 100 நாள் திட்டங்களையும் பாருங்க. எதுவுமே இல்லை. மீண்டும் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி வந்துவிடாதா என்கிற எதிர்பார்ப்பு மக்கள் இடையே வந்துருச்சு.

ஏற்கனவே இருந்த சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா பண்ணிவிட்டுதான் இப்ப த.வெ.க.வில் வேட்பாளராக ஆயிருக்காங்க, அவங்களுக்கு எந்த அளவுக்கு வரவேற்பு இங்க இருக்கும்னு நினைக்கிறீங்க? ஆல்ரெடி நீங்களே சோசியல் மீடியால பார்த்திருப்பீங்க. எல்லா பக்கமும் புறக்கணிச்சிட்டு தானே இருக்காங்க. முதலமைச்சர் அதிக அளவு இங்க ஸ்பென்ட் பண்ணி பிரச்சாரம் பண்ணிருக்காங்க. முதலமைச்சரை நிறுத்தி பேசுற அளவுக்கு வந்து ஒரு பயத்தை ஏற்படுத்தி இருக்கிறது எங்களுக்கு மிகப்பெரிய வெற்றி தான் இவ்வாறு செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; காவல்துறையினரால் 'தேடப்பட்டு வரும் குற்றவாளி'யோடு முதலமைச்சர் விஜய் மாட்டு வண்டியிலே பிரச்சாரம் செய்தாராமே தெரியுமா உனக்கு?

பட்டணம் : **ஆமாமய்யா; அதுமட்டுமா, ஏராளமான போலீஸ் அதிகாரிகளும் அவங்களுக்கு அப்போது பாதுகாப்பா இருந்தாங்களே அது கூட தெரியும்பா! ஸ்காட்லாந்து யார்டு போலீசுக்கு இணையா இருந்த நம்ம காவல்துறையை நினைச்சாதான் பரிதாபமா இருக்கு.**